முதலாளிகளுக்கு அதிக லாபம் வருகிறது என்கிற கருத்தினையும் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் வரியும் உயர்த்தப் பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தனியார் பஸ்களில், எக்ஸ்ப்ரஸ் பஸ்ஸாக ஓடுபவை 3 பைசாவிற்கு மேல் வசூலிக்கிறார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : விரைவுப் பேருந்து களைப் பொருத்தவரையில், 50 சதவிகிதம் அதிகமாக வசூலிக்கலாம் என்று விதி போட்டிருக்கிறோம். அவர்கள் தரும் வசதிகளைப் பொருத்து, கட்டணத்தை உயர்த்த அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

அரசுப் போக்குவரத்துத் துறையிலுள்ள பழைய பேருந்துகள்.

*328 வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துக்குச் சொந்தமான பழுதான பழைய பஸ்கள் ஏலம் மூலம் விற்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சமீப காலம் வரை, பழைய பஸ்கள், ஏலம் மூலம் விற்கப்பட்டன. கடைசி ஏலம் 22—9—1970 இல் விடப்பட்டது. அதன் பிறகு பழைய பஸ்கள் ஏலத்தில் விடப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழக அரசு பழைய பேருந்துகளை ஏலத்தில் விட செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழக அரசு பழைய பேருந்துக்களை ஏலத்தில் விடுவதில்லை என்று முதல் அமைச்சரோடு நடத்திய கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், ஏலத்தில் விடப்பட்ட பஸ்ஸின் விலை என்ன என்பதை அறிவிப்பாரா ?

[1972 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏலத்தில் விடுவதில்லை என்று முடிவு எடுத்திருப்பதாகச் சொன்னேன். தனிக் கேள்வி போட்டால், முந்தைய ஆண்டுகளில் என்ன விலைக்கு விடப்பட்டது என்பதைச் சொல்லலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஏலத்தில் விடுவதில்லை என்றால், நம்முடைய ஒர்க்ஷாப்பில் எப்படிச் செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதற்காகத் தனிப் பிரிவு அமைத்து, அந்தப் பிரிவினர் பேருந்துகளைச் செப்பனிட்டு, செம்மைப்படுத்தி, அவற்றை இயங்க வைத்திருக்கிறார்கள். அப்படி இதுவரையில் 27 பேருந்துக்கள் அவர்களால் செப்பனிடப்பட்டு நல்ல முறையில் ஓட்டக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : பழுதான பஸ்களை செப்பனிட்டு திரும்பவும் ஓட்டுவதாகச் சொன்னார்கள். அப்படிச் செய்யப்படும் வண்டிகள் எத்தனை ஆண்டுகளானதாக இருக்க வேண்டும் என்று நிர்ணயம் இருக்கிறதா ? டாக்சிகளுக்கு 10 வருஷம் என்று சொல்கிறார்களே. பஸ்களை திரும்பத் திரும்ப ரிப்பேர் செய்து ஓட்டுவது என்பதற்கு ஏதாவது டைம் லிமிட் இருக்கிறதா ? அமைச்சர் அந்த விவரத்தைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தொழில் நுட்ப ரீதியாக Technical aspects என்று சொல்வது போல, அவை தகுதியாக இருக்கின்றனவா, இயங்க முடியுமா என்பதைப் பார்த்து, அதன் மேல் பழுது பார்த்து விடப்படுகின்றன. இனி இயங்கவே முடியாது என்கிற பேருந்துகளை, ரிப்பேருக்கு ஆகும் செலவு அதிகமாக இருக்கும் என்று இருப்பவற்றை, அதிலிருந்து பொருள்களைப் பிரித்து எடுத்து உபயோகப்படுத்தப் படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பழுதான பஸ்கள் 27 ரிப்பேர் செய்து ஓட்டுவதாகச் சொன்னார்கள். அவற்றில் உள்ள என்ஜின்களை உபயோகித்து, ட்ரெயிலர் பஸ்களாக ஓட்ட முடியுமா என்பதைப் பார்த்து, அப்படி ட்ரெயிலர் பஸ்கள் ஓட்டுவதற்கான திட்டம் இருந்தால், இதுவரையில் அப்படி பழுதான பஸ்கள் எத்தனை என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ட்ரெயிலர் பஸ்ஸாக ஓட்டப்படுகிறது. எத்தனை என்ற விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த கண்டெம்ட் பஸ் சம்பந்தமாக ஏலம் போடுவதற்காக ஒரு கமிட்டி இருந்ததே, அந்தக் கமிட்டியின் சிபாரிசின் அடிப்படையில் 22—1—1972 அன்று ஏலம் விடப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் 22—9—1970 என்று சொன்னேன். அந்த சிபாரிசின்படித்தான் ஏலம் நடைபெற்றிருக்கும். இப்பொழுது ஏலம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : கண்டெம்ட் பஸ்களை ஏலத்தில் விடுவார்களா ? அதற்கு ஏதாவது குழு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எதையும் ஏலத்தில் விடுவதாக இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, பழுது பார்க்கப்பட்டு மறுபடியும் ரோட்டிலே விடப்படுவதாகச் சொன்னார்கள். பழுது பார்த்த செலவு என்ன என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்பொழுது ஓடும் பஸ்களில் அதிகமாக எத்தனை ஆண்டுகள் ஒரு பஸ் ஓடுகிறது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பேருந்துகளைப் பொறுத்தவரையில், லேலண்டு 2½ லட்சம் மைல்களும், பென்ஸ் 2¼ லட்சம் மைல்களும் ஓட வேண்டும் என்றும், குறைந்தது ஆறு ஆண்டுகள் ஓட வேண்டும் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. எத்தனை என்பதற்கான விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்பொழுது பழுது அடைந்த பஸ்களை, சிலவற்றை கல்லூரிகள், பாடசாலைகள் இவற்றிற்கு, ஊருக்கு வெகு தூரத்தில் இருப்பவற்றிற்கு

1972 மார்ச் 6]

மாணவர்கள் வசதிக்காக விடுவதற்கு, கல்லூரிகள், பாடசாலைகள் இவற்றிற்கு இலவசமாக அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இப்பொழுது சுய தேவையைப் பூர்த்தி செய்யவே பஸ்கள் தேவைப்படுகின்றன.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, ஒரு புதுப் பஸ் எவ்வளவு லட்சம் மைல்கள் ஓடவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், அரசாங்க பஸ்கள் பல, நடு ரோட்டுக்களில் நின்று விடுகின்றன. சரியான கண்காணிப்பும் கிடையாது. ஒரு ஜில்லாவிலே தலைமை அதிகாரி யாராவது ஒருவரிடம் பொறுப்புக் கட்டி விட ஏற்பாடு செய்வார்களா? சாமான்கள் முழுதும் டெக்னிகல் சைடில் பார்த்து, பஸ்களை சரியான நிலையில் வைக்க முடியுமா என்பதைப் பார்த்து அப்படி ஒரு அமைப்பை கொண்டு வர அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சரியாகக் கொண்டு வரத்தான் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. படிப்படியாக நல்ல முறையில் முன்னேறி வருகிறது. மாவட்டத்தில் யாராவது ஒருவரிடம் ஒப்படைக்கலாம் என்றார்கள். யாரைப் போடுவது என்பதுதான் பிரச்சினை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: When the private operators are granted Stage Carriage Permits they are asked to put up the latest model buses of 1970, 1971 and 1972, whereas the Government is running old model buses. Would the Government replace all such old model buses with new models?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசாங்கப் போக்கு வரத்துத் துறையில் வேண்டிய அளவுக்குப் புதிய பஸ்கள் இருக்கின்றன. தனியார் புதிய பஸ்கள் விடுவதற்கு அரசாங்கம் உத்தரவு இடுகிறது என்று சொன்னார்கள். அதுதான் தனியார் பஸ்கள் ஒழுங்காக ஓடும் ரகசியமோ என்னவோ.

கோவில்களில் குளிர் சாதன வசதி

* 329 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டிலுள்ள எந்த ஆலயத்திற்காவது தற்போது குளு குளு வசதி செய்யப்பட்டுள்ளதா?